RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# பக்தி இலக்கியங்களில் அறக்கோட்பாடுகள்

**பொ. சுரேஷ் [அ, *]**

[அ] மெய்யியல்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613010, இந்தியா

# A Study of Ethical Principles in Tamil Devotional Literature

**P. Suresh [a, *]**

[a] Department of Philosophy, Tamil University, Thanjavur – 613010, Tamil Nadu, India

* Corresponding Author:
munaivarsuresh@gmail.com

**ABSTRACT**

Throughout history, human societies have developed various ethical principles and systems of conduct to promote human welfare and social harmony. The ancient Tamil thinkers and literary scholars emphasized that society could progress only when individuals were guided by righteous values and moral principles. Therefore, many of the ethical teachings articulated by Tamil scholars were expressed through the framework of spiritual and devotional thought, making moral instruction accessible through religious literature. Following the Sangam period, Jainism and Buddhism gained considerable influence in Tamil Nadu. In response to these religious and philosophical developments, devotional traditions associated with Saivism and Vaishnavism became increasingly prominent. Major devotional works such as the Panniru Thirumurai and the Nalayira Divya Prabandham emerged as important literary expressions of these traditions. These works were not limited to religious devotion; they also incorporated numerous ethical principles intended to guide individual conduct and promote disciplined social life. The interaction and intellectual differences among various religious traditions contributed to the development of a rich body of devotional literature centred on questions of morality, righteous living, spiritual discipline, compassion, devotion, and social responsibility. By presenting ethical teachings through religious narratives and devotional poetry, these works sought to shape individual character and establish values considered essential for a harmonious society. This article examines the ethical principles embedded in Tamil Bhakti literature, focusing on the ways in which devotional works communicate moral values and guide human conduct. The study highlights the relationship between devotion and ethics and demonstrates how Bhakti literature contributed significantly to the development of Tamil literary, cultural, and social thought.

**Keywords:** Virtue, Panniru Thirumurai, Bhakti literatur, Nalayira Divya Prabandham

## முன்னுரை

சங்க காலத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் சமண, பௌத்த சமயங்கள் செல்வாக்குப் பெற்றன. துறவறத்திற்குப் பெருமை ஏற்பட்டது. வீடுபேறு குறித்த சிந்தனைகள் மேலோங்கின. சமணசமயம் புலனடக்கத்தை அதிகம் வலியுறுத்தியது; இசை முதலான நுண்கலைகள் புலன் உணர்வைத் தூண்டும் என்னும் கருத்தில் அவற்றுக்கு எதிராக நின்றது. சைவமும் வைணவமும் இதற்கு மாறான நிலை எடுத்தது. இறைபக்திக்கு இன்ப நுகர்ச்சி ஒரு தடையாகாது. உலகம் உண்மையானது, உலகியல் இன்பங்களை நுகர்ந்து கொண்டே இறைவனிடம் பக்தி செலுத்தலாம் என்ற கோட்பாட்டினை இச்சமயங்கள் முன்வைத்தன.

“மண்ணின் நல்ல வண்ணம் வாழல் ஆம், வைகலும்;

எண்ணின் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவு இலை

கண்ணின் நல்ல(ஃ)து உறும் கழுமல வள நகர்

பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே” (திருமுறை.3,024)

என்றார் **திருஞானசம்பந்தர்**.

“நன்று நாள்தொறும் நம் வினை போய் அறும்

என்றும் இன்பம் தழைக்க இருக்கல் ஆம்

சென்று, நீர், திரு வேட்களத்துள்(ள்) உறை

துன்று பொன்சடையானைத் தொழுமினே”(திருவாசகம்-5.042)

என்றார் **திருநாவுக்கரசர்**.

“சொல்லப் பட்ட ஆயிரத்துள் இவையும் பத்தும் வல்லார்கள்

நல்ல பதத்தால் மனைவாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே” (திருவாய். 8.10:11) என்றார் **நம்மாழ்வார்**.

**எனவே, சமண சமயத்தின் செல்வாக்கினை கட்டுப்படுத்தவும் சைவ வைணவ கருத்தியல்களை நிலைநிறுத்தவும் பன்னிருத்திருமுறை, நாலாயிரத் திவ்யபிரபந்தம் போன்ற பக்தி இலக்கியங்கள் தோன்றின. அவற்றின் விளைவாக** சமயம் சார்ந்த பல்வகை இலக்கியங்களும் புதுவகை மரபும் தமிழில் ஏற்பட்டது. இவற்ளுள் குறிப்பாக திருமுறைகள், நாலாயிரத்திவ்யப்பரபந்தம், காப்பியங்கள், சிற்றியலக்கியங்கள், பிள்ளைத்தமிழ், உலா, மடல், போன்றவற்றை கூறலாம். களப்பிரர் காலத்திலேயே காரைகாலம்மையார் அற்புதத்திருவந்தாதி, திருவிரட்டைமணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் ஆகியவற்றை இயற்றியுள்ளனர். மூவாயிரம் பாடல்களைக் கொண்ட திருமந்திரத்தை திருமூலர் இயற்றியருளினார். பக்தி இயக்கத்திற்குள் ஏற்பட்ட பிணக்குகளால் மானுடத்திற்கு அறக்கருத்துக்களை கூற பக்தி இலக்கியங்கள் பல தோன்றின. அவற்றின் வாயிலாக தனி மனிதனின் ஒழுக்கமும், சமுதாய மேம்பாடும் போற்றப்பட்டது. தனிமனிதனின் முன்னேற்றத்திற்கு அவனது நன்னடத்தை முக்கியப் பங்கு வகிக்கின்றது, அதற்காக அறம் சார்ந்த கருத்துக்களை பக்தி இலக்கியங்களின் வழி சான்றோர்கள் குறித்துள்ளனர்.

## அறக்கோட்பாடுகள்

அறம் என்ற சொல்லிற்கு இன்னதுதான் பொருள் என எவற்றையும் அறுதியிட்டுக் கூறி விட இயலாது, ஏனெனில் இச்சொல் பல பொருள்களையும் கருத்துக்களையும் உள்ளடக்கியச் சொல்லாகும். அறம் என்னும் கருத்து காலத்திற்கு காலம் மாறிவருவது போன்று தோன்றினாலும் அதன் அடிப்படை என்றும் மாறாத தன்மையுடையது. உலகின் பல நாடுகளில் உள்ள மக்களின் வாழ்வியல் முறைக்கும் நமக்குமான கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் போன்றவைக்கும் முற்றிலும் வேறுபாடு உள்ளது.

‘அறு’ என்ற வினைச்சொல் அடியாகப் பிறந்ததே ‘அறம்’ என்னும் சொல். இச்சொல்லுக்கு அறுத்துச் செல், வழியை உண்டாக்கு, உருவாக்கு, துண்டி, வேறுபடுத்து என்ற பலவகைப் பொருள்கள் வழங்கி வருகின்றன. இத்தகைய சொல் ஆராய்ச்சியின் அடிப்படையில் அறம் என்னும் சொல்லிற்குப் பின்வருமாறு விளக்கம் கூறலாம். மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் முழுநிறை வடிவமே அறம் என்று கூறுவர். அறம் என்பது

‘பிறவிதோறும் மனிதனைப் பற்றிக் கொண்டு வரும் தீவினையை

அறுத்தெறிவதே அறம்’ (திருக்குறள்-நீதி இலக்கியம்-பக் 23)

எனச் சான்றோர் குறித்துள்ளனர்.

தமிழில் கூறப்படும் அறம் என்ற சொல்லிற்கு தருமம், நெறி, ஒழுக்கம், கடமை, கொடை, ஈகை, தானம், இரக்கம் போன்ற பல்வேறு பொருள்படும். குறிப்பிட்டுக் கூற வேண்டுமெனில் சான்றோர்கள் குறிப்பிட விரும்பும் எந்த ஒரு நற்ச்சிந்தனை கருத்துக்களுக்கேற்பவும் இடத்திற்கேற்பவும் பொருள் விளக்கமாகவும் இச்சொல் பயின்றுவரும். ஏனெனில் மனிதன் தான் மேற்கொள்ளும் அனைத்து செயல்களிலும் அறத்தினைப் பின்பற்ற வேண்டும் என்பதற்காகவே இறைநிலைக்கு இணையாக வைத்து பக்தி இலக்கியங்களில் பாடியுள்ளனர்.

## அன்பு

நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் அன்பாக இருக்க வேண்டும் என்பதை திருந்திரப் பாடல் வலிறுத்துவதை

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்

அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்

அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்

அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே" (பாடல்: 270)

அன்பு வேறு, சிவம் வேறு, இரண்டும் ஒன்றல்ல; வேறு வேறு என்று சொல்பவர்கள் அறிவில்லாத மூடர்கள். அன்பே சிவம் என்பதை யாரும் அறியாதிருக்கிறார்கள். அன்புதான் சிவம் என்பதை எல்லோரும் அறிந்து விட்டால், பிறகு அவர்களே அன்புருவான சிவமாய் வாழ்ந்திருப்பார்கள் என திருமந்திரப் பாடலின் மூலம் அறியலாம்

## ஈகை

தாம் தேடிய செல்வங்களும், தம் முன்னோரால் ஈட்டப் பெற்று வழிவழியாகக் கத்துவரும் மற்ற செல்வங்களும் லிலைப் பொன்னம்பலத்தில் முடல் செய்தருள்கின்ற பெருமானின் அடியவர்களுக்கே உரியனவாம் என்று விரும்பிய மனத்தினோடு சிவனடியார்கள், எளியவர்கள் அனைவருக்கும், தம் உள்ளத்தில் நிறைந்த அன்பின் மகிழ்ச்சியுடன் வேண்டிய பொருள்களையெல்லாம் குறைவின்றிக் கொடுத்ததை மெய்பொருள் நாயனாரின் வாழ்க்கை நமக்கு உணர்த்துகிறது. இதனை,

"தேடிய மாடும் நீடு செல்வமும் தில்லை மன்றுள்

ஆடிய பெருமான் அன்பர்க் காவன ஆகும் என்று

நாடிய மனத்தி னோடு நாயன்மார் அணைந்த போது

கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவறக் கொடுத்து வந்தார்" (பெரிய.மெய்.பா.4)

என்ற பெரரியபுராணப் பாடல் மூலம் அறியலாம்.

## இறைநம்பிக்கை

பன்னிரு திருமுறைகள், நாலாயிரத் திவ்யப்பிரபந்தம் முதலிய நூல்கள் இறைநம்பிக்கைகை வலியுறுத்துகின்றன. மனிதன் இறைவன் என்ற கருத்தை நம்புவதால் தான் செய்யும் செயல்கள் அனைத்தையும் அறநெறியுடன் செய்வான். இறைவன் மீதான அன்பானது அதீத இறைநம்பிக்கை, பக்தி, பிரபத்தி, சரணாகதி என வெளிப்படுகின்றன. இதனை திருமழிசை ஆழ்வார் குறிப்பிடுகையில், இன்றோ, நாளையோ, இன்னும் கொஞ்ச நாள் ஆகலாம், எவ்வளவு நாள் ஆனால் என்ன, உன் அருள் எனக்கு கிடைத்தே ஆக வேண்டும். எனக்கும் உன்னை விட்டால் ஆள் இல்லை; உனக்கும் என்னை விட்டால் ஆள் இல்லை. பக்தன் இல்லாமல் கடவுள் இல்லை. கடவுள் இல்லாமல் பக்தன் இல்லை. இறைவன் பெரியவன் தான். அளவற்ற ஆற்றல் உடையவன் தான். அன்பும் கருணையும் உடையவன்தான். இதை எல்லாம் வைத்துக் கொண்டு அவன் என்ன செய்வான்? அன்பையும், கருணையும் செலுத்த ஒரு ஆள் வேண்டாமா? இறைவா, உன் அருளைத் தர என்னை விட சிறந்த ஆள் உனக்குக் கிடைகப் போவது இல்லை, உனக்கும் என்னை விட்டால் வேறு ஆள் யாரும் இல்லை. அது போல இறை அருளைப் பெற உன்னைவிட்டால் எனக்கும் வேறு யாரும் இல்லை எனகுறிப்பிடுகிறார். இதனை,

"இன்றாக நாளையே யாக, இனிச்சிறிதும்

நின்றாக நின்னருளென் பாலதே, - நன்றாக

நானுன்னை யன்றி யிலேன்கண்டாய், நாரணனே

நீயென்னை யன்றி யிலை" (நால.திவ்.2388)

"வேதியனை வேதப் பொருளானை வேதத்துக்

காதியனை ஆதிரைநன் னாளானைச் - சோதிப்பான்

வல்லேன மாய்ப்புக்கு மாலவனும் மாட்டாது

கில்லேன மானென்றான் கீழ்" (திருஇரட்டை மணிமாலை 11.003)

காரைக்கால் அம்மையார், திருமழிசை ஆழ்வார் பாடிய இப்பபாடல்கள், துன்பம் நீக்கி அருளும் இறைவனின் பெருமையை உணர்த்துகின்றன.

## சமய நல்லிணக்கம்

இன்று உலகில் கணப்படுகிற மிகப்பெரிய சிக்கல், பிரச்சனை என்பது சமயங்களுக்கிடையேயான வேற்றுமைச் சிந்தனையாகும், இச்சமய மோதல்களால் ஒவ்வொரு நாட்டிற்குள்ளும் பிற நடுகளுடனும் காழ்புணர்ச்சி ஏற்படுகின்றன. இத்தகையப் போக்குகள் மற வேண்டும் என்பதை வள்ளலார்பாடல் வழி அறியலாம்,

"பொங்குபல சமயமெனும் நதிக ளெல்லாம்
புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே எங்கும்
கண்ணாகக் காண்கின்ற கதியே அன்பர்
தங்கநிழல் பரப்பிமயல் சோடை யெல்லாந்
தணிக்கின்ற தருவேபூந் தடமே ஞானச்
செங்குமுத மலரவரு மதியே எல்லாம்
செய்யவல்ல கடவுளே தேவ தேவே (மகாதேவ மாலை, பா. 2118)

இக்கருத்தையே நம்மாழ்வார் குறிப்பிடுகையில்,

உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே. (திருவாய்மொழி -1)

இறைவனானவன் நற் பண்புகளாகவும் உயர் குணங்களாகவும் இருப்பவன் என்பதைக் கூறி அனைத்து தெய்வங்களுக்குமான வரையறைகளை வகுத்துக் கூறியுள்ளார்.

## முடிவுரை

அன்புடமை, நன்னடத்தை, உண்மையுனர்வு, கடமை, மன்னிக்கு மனம், நேர்மை, தன்னம்பிக்கை, இறை அச்சம், சமூக அச்சம், தீய பழக்கங்கள், பிரன்மனை நோக்காமை, தன்னலமற்ற தொண்டு, சமூக அக்கறை என பல்வேறு அறக்கருத்துக்களை கூற பக்தி இலக்கியங்கள் பெரிதும் உதவியுள்ளன. தனிமனிதனைக் கட்டுப்படுத்த எத்தகையச் சட்டங்களும் அரசும் முயற்சித்தாலும் அவனாக மன மாற்றம் பெற்றால் மட்டுமே அவனும், அவனைச் சார்ந்த சமூகமும் நாடும் மேன்மையடையும். ஆகவே, தனிமனித ஒழுக்கத்தை மீட்டெடுக்கவும் அவனை நல்வழிப்படுத்தவும் அறத்தின் வழி அமைந்த பக்தி இலக்கியங்கள் என்றென்றும் போற்றுதலுக்குரியன.

## References

J. Mohan, (2018) Thirumurai Pathigangal, Sivalayam, Chennai

Varadharasan, Mu., (2004) Thirukkural Thelivurai, The South India Saiva Siddhantha Works Publishing Society, Tinnevelly, India.

Manikam, A. (2004) Thirumanthiram, Varthaman Pathippagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License